மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, வாழையில் தமிழ் நாட்டில் மத்திய வாழை ஆராய்ச்சி நிலையம் ஆடுதுறை, தஞ்சை மாவட்டத்திலும், தோட்டக்கால் வாழை ஆராய்ச்சி நிலையம், உய்யங்கொண்டான் திருமலை, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும், மலை வாழை ஆராய்ச்சி நிலையம், மங்களகொம்பு, மதுரை மாவட்டத்திலும், வாழை ஆராய்ச்சி நிலையம் வேலூரிலும் இருக்கின்றன.

* 40 Q.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the acreage in which banana has been cultivated under intensive export scheme in North Arcot district?

திரு. எல். பலராமன் : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

வட ஆற்காடு மாவட்டத்தில் தீவிர ஏற்றுமதி திட்டத்திற்கான வாழை எத்தனை ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : வட ஆற்காடு மாவட்டத்தில் தீவிர ஏற்றுமதித் திட்டத்திற்கான வாழை சுமார் 3,300 ஏக்கர் நிலத்தில் பயிரிடப் பட்டுள்ளது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இதற்கு மத்திய அரசாங்கம் என்ன மானியம் வழங்குகிறது ? இந்த அதிகாரிகள் தனிப்பட்ட விவசாயிகளிடம் எவ்வளவு நபர்களிடம் தொடர்பு கொண்டார்கள் என்ற தகவல் அரசுக்கு இருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, தனியாக அப்படிப் பட்ட உதவிகள் எதுவும் செய்யப்படவில்லை. கூட்டுறவுத் துறை மூலமாக அவர்களுக்குக் கடன் கொடுக்கிற திட்டம் இப்போது வந்திருக்கிறது.

## *Byracon Medicine*

* 41 Q.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that ‘ Byracon ’ medicine used to kill the red-nosed insects which attack the Cocoanut seedlings is not available now;

(*b*) whether the growth of cocoanut trees has been affected thereby; and

(*c*) if so, the action taken thereon?

1973 பிப்ரவரி 6]

"பைரகோன்" மருந்து

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தென்னங்கன்றுகளைத் தாக்கும் சிவப்பு மூக்கு பூச்சிகளை கொல்லும் "பைரகோன்" என்ற மருந்து தற்போது கிடைப்பதில்லை என்பது உண்மையா ?

(இ) அதனால் தென்னை வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளதா ?

(உ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(உ) வினாவிற்கு இடமில்லை.

*Scheme to Reorganise the District set-up of the Agricultural Department*

* 42 Q.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) whether the Government have formulated any scheme to reorganise the District set-up of the Agricultural Department ; and

(*b*) if so, the details thereof?

மாவட்ட விவசாயத் துறையை மாற்றியமைக்கும் திட்டம்

**திரு. எல். பலராமன் :** மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் ;

(அ) மாவட்ட விவசாயத் துறையை மாற்றி அமைக்க அரசு திட்டம் ஏதும் வகுத்துள்ளதா ?

(இ) ஆமெனின், அதன் விபரம் யாது ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஆம். விவசாயத் துறையை வட்டார அடிப்படையில் மாற்றியமைக்கும் திட்டத்தில் மாவட்ட அமைப்பை மாற்றியமைக்கும் திட்டமும் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு, நிர்வாக சீரமைப்புக் குழுவின் அறிக்கை வெளிவந்த பிறகு மேல் நடவடிக்கை எடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

**திரு. எல். பலராமன் :** தலைவரவர்களே, இந்த அறிக்கை எப்போது வெளி வரும் என்று அமைச்சரவர்கள் கூறுவார்களா ? இந்த அமைப்பினால் அரசாங்கத் திற்கும், பொது மக்களுக்கும் என்ன நன்மை என்பதையாகிலும் சுருக்கமாக அவைக்கு அமைச்சரவர்கள் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
சத்தியமேவ ஜெயதே
TRUTH ALONE TRIUMPHS